# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.89/2023** **நாள் : 31.10.2023**

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் இன்று (31.10.2023) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் இன்று 31.10.2023 தலைமைச் செயலகத்தில், 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேருராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது.**

வடகிழக்கு பருவமழையின்போது கனமழை மற்றும் புயலினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், ஜெனரேட்டர்கள், ஜெ.சி.பி வாகனங்கள், கழிவுநீரகற்றும் வாகனங்கள், திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் உள்ளிட்டவைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பருவமழையின்போது தாழ்வான இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் மற்றும் வெள்ள பாதிப்புகளிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அலுவலர்களைக் கொண்டு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மேலும், அனைத்து

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களில் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகள் யாவும் பருவமழையின்போது கிடைக்கக்கூடிய மழைநீரினை சேமிக்கும் வகையில் உள்ளதா என்பதை கண்டறிந்து உபரிநீர் வெளியேறும் பட்சத்தில் போதிய வாய்க்கால்கள் ஏற்படுத்தி குடியிருப்பு பகுதிகளுக்குள் மழைநீர் செல்லாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஏரிகள் மற்றும் குளங்களுக்கு அருகில் வசிக்கக்கூடிய பொதுமக்களையும், தாழ்வான பகுதிகளில் குடியிருப்பவர்களையும் மாற்று இடங்களில் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிட வேண்டும். மேல்நிலை/கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை உரிய சுழற்சி முறையில் சுத்தம் செய்து குடிநீரில் போதிய குளோரின் கலந்து குடிநீர் விநியோகத்தை கண்காணிக்க வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதாரப் பணியாளர்களும் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். மேலும், நடமாடும் சுகாதார குழுக்களை அமைத்து மழையினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் விரைவாக சென்று மருத்துவ உதவிகள் அளிக்கப்பட வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி

அமைப்புகளில் உள்ள அனைத்து சுகாதார மையங்களிலும் போதிய மருந்து இருப்பில் வைத்திருக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்களில் நீர் தேங்கும் பகுதிகளில் உள்ள வடிகால்களில் அடைப்புகளைக் கண்டறிந்து மழைநீர் வடியும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிப்பு பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டும். வடகிழக்கு பருவமழையின்போது பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.விஜயகுமார், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்